**முதன்மை மாவட்ட நீதிமன்றம், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்**

**O.S.18/2019**

**சாட்சியின் சான்றுரை PW-1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | - | கிருஷ்ணன் | வட்டம் | - | |
| த/பெ | - | ராமசாமி | சாதி | - | |
| வயது | - | | மதம் | - | |
| கிராமம் | - | | தொழில் | - | |

27.08.2024 இன்று 1969ஆம் ஆண்டு சட்டம் 10-ன் படி என்னால் உறுதிமொழி கொடுத்து சாட்சியமளிக்கப்பட்டது.
வாதி சாட்சி 1 வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

பிரதிவாதி 1,2,4 தரப்பில் குறுக்குவிசாரணை

வழக்கை நான் எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் தாயார் என் தம்பி பெயரில் தான செட்டில்மெண்ட் எழுதி கொடுத்துள்ளார் அதை எதிர்த்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கை யாருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன் என்றால் ராஜசேகர், தனலட்சுமி, செல்வி, சித்ரா, தணியரசு என்பவரிடம் என் தந்தையார் அடமானம் வைத்துள்ளார். செந்தில்குமார் என்பவர் கடனை பைசல் செய்துள்ளார். செந்தில்குமார் என் பெரியம்மாவின் மகன் என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் என் பூர்விக சொத்தாகும். வழக்கு சொத்துக்கள் தவிற்த்து எனக்கு வேறு சொத்துக்கள் உள்ளது என்றால் இல்லை. எனக்கு எந்த ஊரில் சொத்துக்கள் உள்ளது என்றால் பள்ளிகுளம், மேல்கூத்தபக்கம், அருகாவூர் ஆகிய இடங்களில் சொத்துக்கள் உள்ளது. இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பு நாங்கள் ஊரில் பேசி எங்களுக்குள் பஞ்சாயத்தில் பாகப்பிரிவினை ஏற்பட்டது என்றால் இல்லை. என் பெயர் கிருஷ்ணன் எனக்கு சங்கர் என்று ஒரு பெயர் உள்ளது என்றால் ஆம். எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியாது. 13.11.2014ம் தேதியில் ஏற்பட்ட கூர்சீட்டில் எனக்கு பாகம் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் இல்லை. அதில் உள்ள கையெழுத்து என்னுடையது

என்றால் இல்லை. ஊரில் ஏற்கனவே பாகம் செய்துவிட்டு தற்போது வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதில் சாட்சிகளாக உள்ள வேலாயுதம், ரவி, வேணுகோபால், சதாசிவம், பார்த்திபன் ஆகியோர் என் ஊர்காரர்கள் என்றால் ஆட்கள் தெரியும் ஆனால் அவர்கள் வெளியூர்காரர்கள். நான் வழக்கு தாக்கல செய்தவற்கு முன்பு என் தாயாரிடம் பாகம் பிரித்து கொடுங்கள் என்று கேட்டேனா என்றால் இல்லை. அதற்கு முன்பே அவர் தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்துவிட்டார். தான செட்டில்மெண்ட் என்று எழுதினார்கள் என்றால் 2014ல் எழுதினார்கள். வழக்கு சொத்துக்கள் இல்லாமல் வேறு சொத்துக்களும் ஊரில் உள்ளது என்றும் அதன் சர்வே எண்கள் 182/6ல் அருகாவூரில் 68 சென்ட் நிலம் உள்ளதா என்றால் தெரியாது. அதே ஊரில் 182/10பி இல் அருகாவூரில் 63 சென்ட் நிலம் உள்ளதா என்றால் 6 காணி நிலம் மற்றும் 3 மோட்டார் சென்ட் நிலம் உள்ளது. அதே ஊரில் 182/11ல் 16 சென்ட் நிலம் உள்ளதா என்றால் அது மொத்தமே அவ்வளவு தான் உள்ளது. 182/12சி இல் 52 சென்ட் நிலம் உள்ளது என்றால் நான் சொன்னது போல மொத்தமே அதில் ½ ஏக்கர் தான் உள்ளது. 182/14ல் 71 சென்ட் உள்ளது என்றும் 182/9பி2ல் 6 சென்ட் நிலம் உள்ளது என்றும் 190/5ல் 18 சென்ட் நிலம் உள்ளது என்றால் அருகாவூரில் மொத்தம் ½ ஏக்கர் தான் உள்ளது அதில் 3 கிணறு உள்ளது. மேற்சொன்ன சர்வே எண்ணில் உள்ள சொத்துக்களை நான் வழக்கில் சேர்க்கவில்லை என்றால் தெரியவில்லை. அவ்வளவு நான் நீதிமன்றத்திற்கு ஏன் வருகிறேன். பள்ளிக்குளத்தில் சொத்துக்கள்

உள்ளது என்றால் சரிதான். அங்கு சர்வே எண்.51/1ல் 25 சென்ட் நிலம் உள்ளது என்றால் தெரியாது. சர்வே எண்.51/14ஏ வில் 28 சென்ட் நிலம் உள்ளது என்றால் தெரியாது. மேற்சொன்ன விவரங்களை எதிருரையில் சொல்லவில்லை என்பதால் வாதி தரப்பில் ஆட்சேபனை செய்யப்படுகிறது. அதனால் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணைக்காக அனுமதி கோரப்பட்டு அனுமதி அளிக்கப்படுகிறது.

Sd/- R.Poornima,
Principal Sessions Judge,
Villupuram.